**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்
வடக்கு, தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**ந.க.எண் : 1660 / 2022 / எம்சி. 8 நாள் 04.04.2022**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்றக் கூட்டம் நடைபெறுதல்- நிகழ்ச்சி நிரல் அனுப்புதல்– தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் **மாமன்ற சாதாரணக் கூட்டம் 11.04.2022 ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் **மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கத்தில்** நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டப்பொருள்

**(ஒப்பம்) மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உத்திரவின்படி அனுப்பப்படுகிறது/**

04/04/22
**மாமன்றச் செயலாளர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**

துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

**அ) திருக்குறள்**

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(குறள் - 385)

**விளக்கம்**

பொருட்களை உருவாக்கி செல்வத்தை ஈட்டி நாட்டின் வளம் பெருக்கி அவற்றையும் மக்களையும் பாதுகாத்து, எல்லோரும் துய்ப்பதற்கான நெறி முறைகளை வகுத்துத் திறமையாக நிறைவேற்றுவது நல்லாட்சியின் வலிமை.

- திருவள்ளுவர்.

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டல வார்டு பகுதிகளில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையங்கள் மற்றும் மாநகர பொது சுகாதார ஆய்வுக்கூடங்கள் கட்டுதல் பணிக்கு **15** வது தேசிய நிதிக்குழு – சுகாதார பணி 2021- 2022 -க்கான திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.32454/2021/AMRUT-2 நாள்.**17.12.2021**-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிகளுக்கு **11.02.2022** மற்றும் **15.03.202** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு **25.02.2022** மற்றும் **21.03.2022** அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | கிழக்கு மண்டலம் | | | | | |
| 1 | கிழக்கு மண்டலம்– வார்டு எண்.**34**க்குட்பட்ட கருப்பராயன்பாளையம் (விளாங்குறிச்சி) பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுதல்<br><br>ந.க.எண்.**9672/2021**/எம்.டி.**3** | **25.00** | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். **17.12.2021** | இரண்டாம் அழைப்பு **11.02.2022** | திரு.கே. முருகேசன் மதிப்பீட்டை விட **0.19**% குறைவு | திரு.கே. முருகேசன் மதிப்பீட்டை விட **0.19**% குறைவு |
| 2 | கிழக்கு மண்டலம்– வார்டு எண்.**62**–க்குட்பட்ட அய்யர் லே அவுட் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுதல்<br>ந.க.எண்.**9680/2021**/எம்.டி.**3** | **25.00** | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். **17.12.2021** | இரண்டாம் அழைப்பு **11.02.2022** | திரு.கே. முருகேசன் மதிப்பீட்டை விட **0.19**% குறைவு | திரு.கே. முருகேசன் மதிப்பீட்டை விட **0.19**% குறைவு |
| | மேற்கு மண்டலம் | | | | | |
| 3 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.**11**–க்குட்பட்ட சாய்பாபா காலனி பாலசுப்பிரமணியம் நகர் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.**9666/2021**/எம்.டி.**2** | **25.00** | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். **17.12.2021** | இரண்டாம் அழைப்பு **11.02.2022** | **1)**.திரு. ஆர்.புஸ்பராஜ் மதிப்பீட்டை விட **5.00**% குறைவு<br><br>**2)**.தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட **0.98**% குறைவு | திரு. ஆர்.புஸ்பராஜ் மதிப்பீட்டை விட **5.00**% குறைவு |
| 4 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.**9**க்குட்பட்ட கவுண்டம்பாளையம் பிரபு நகர் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.**9665/2021**/எம்.டி.**2** | **25.00** | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். **17.12.2021** | மூன்றாம் அழைப்பு **15.03.2022** | **1)**.திரு. பி.எம்.மாரிமுத்து மதிப்பீட்டை விட **0.11** % குறைவு<br><br>**2)**.திரு டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட **2.60**% குறைவு | திரு டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட **2.60**% குறைவு |
| 5 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.**18**க்குட்பட்ட சுண்டப்பாளையம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண். **9660/2021**/எம்.டி.**2** | **25.00** | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். **17.12.2021** | மூன்றாம் அழைப்பு **15.03.2022** | **1)**.தி/ள்.அம்மன் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட **0.10** % குறைவு<br><br>**2)**. திரு டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட **2.60**% குறைவு | திரு டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட **2.60**% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வடக்கு மண்டலம் | | | | | |
| 6 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.41–க்குட்பட்ட மணியகாரம்பாளையம் அருகில் நேரு அவென்யு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுதல் ந.க.எண்.9720/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | இரண்டாம் அழைப்பு 11.02.2022 | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.98% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.98% குறைவு |
| 7 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.41–க்குட்பட்ட கணபதி மாநகர் 4வது பிளாக் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுதல். ந.க.எண்.9719/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | இரண்டாம் அழைப்பு 11.02.2022 | 1).திரு. எம்.ராஜேந்திரன் மதிப்பீட்டை விட 0.72% அதிகம் 2).தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.91% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.91% குறைவு |
| 8 | வடக்கு மண்டலம்– வார்டு எண். 30க்குட்பட்ட சிவானந்தபுரம்– பாலாஜி நகர் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல். ந.க.எண்.9715/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | மூன்றாம் அழைப்பு 15.03.2022 | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06 % குறைவு | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06 % குறைவு |
| 9 | வடக்கு மண்டலம்– வார்டு எண். 40க்குட்பட்ட இளங்கோ நகர் பகுதியில் நகர்ப்புற நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல். ந.க.எண்.9718/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | மூன்றாம் அழைப்பு 15.03.2022 | 1). திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு 2).திரு. எம்.ராஜேந்திரன் மதிப்பீட்டை விட 0.23% குறைவு 3).தி/ள். எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.37% அதிகம் | திரு. எம்.ராஜேந்திரன் மதிப்பீட்டை விட 0.23% குறைவு |
| 10 | வடக்கு மண்டலம்– வார்டு எண். 28க்குட்பட்ட சரவணம்பட்டி– மாநகராட்சி பள்ளியின் எதிரில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல். ந.க.எண். 9714/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | மூன்றாம் அழைப்பு 15.03.2022 | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| | மத்திய மண்டலம் | | | | | |
| 11 | மத்திய மண்டலம் – வார்டு எண். 72–க்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் (SLM Home) காட்டூர் ஆயுர்வேத வளாகத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுதல். ந.க.எண்.9732/2021/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | இரண்டாம் அழைப்பு 11.02.2022 | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 1.16% குறைவு | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 1.16% குறைவு |
| 12 | மத்திய மண்டலம்– வார்டு எண்.48க்குட்பட்ட (ரத்தினபுரி) முத்துக்குமார் நகர் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல். ந.க.எண்.9727/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | மூன்றாம் அழைப்பு 15.03.2022 | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06 % குறைவு | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06 % குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | மத்திய மண்டலம்– வார்டு எண்.49க்குட்பட்ட மருதகுட்டி லே அவுட் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண். 9728/2021/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | மூன்றாம் அழைப்பு 15.03.2022 | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு | திரு. கே.கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| 14 | மத்திய மண்டலம்– வார்டு எண்.50க்குட்பட்ட காந்திநகர் சீனிவாசபுரம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண். 9735/2021/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | மூன்றாம் அழைப்பு 15.03.2022 | திரு டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட 2.60% குறைவு | திரு டி.விஜயகுமார் மதிப்பீட்டை விட 2.60% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9672/2021/எம்.டி.3

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 59 நாள் 11.04.2022**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய வார்டுகளுக்கு தொடர்புடைய புதிய வார்டுகளின் பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோக திட்டம் (எட்டு இணைக்கப்பட்ட பகுதிகளாகிய துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) ரூ.409.33 கோடிக்கு திருத்தப்பட்ட அரசு ஆணை எண்.G.O.(Ms).No.38 MA &WS (MC –II) Department நாள் 12.04.18 அன்று நிர்வாக அனுமதி வழங்கியது. TNUDF கடன் 25% சதவீதம் ரூ.102.35 கோடி, PSGF மானியம் 13.80% ரூ.56.49 கோடி, மத்திய அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் 31.88% ரூ.130.48 கோடி, தமிழக அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் 19.32% ரூ.79.08 கோடி மற்றும் மாநகராட்சியின் பங்கு 10% ரூ.40.93 கோடி என்ற நிதி ஆதாரத்துடன் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளித்தும் மற்றும் அதற்கான நிபந்தனைகளுக்கு மாநகர மன்ற தீர்மான எண்.140 நாள். 07.05.2018ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. Kfw நிதி உதவி மூலம் TNUDF–லிருந்து (SMIF-TN-II-2) மானியம் பெறுவதற்கான காலம் 31.03.2022–ல் காலாவதியாவதால் மானியம் பெறுவதற்கு கால நீட்டிப்பு செய்ய மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பு.

பார்வை: கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.140 நாள்.07.05.2018 மற்றும் மாநகர மன்ற தீர்மான எண்.354 நாள்.30.06.2021.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோக திட்டம் (எட்டு இணைக்கப்பட்ட பகுதிகளாகிய துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) ரூ.409.33 கோடிக்கு திருத்தப்பட்ட அரசு ஆணை எண்.G.O.(Ms).No.38 MA &WS (MC –II) Department நாள் 12.04.18 அன்று நிர்வாக அனுமதி வழங்கியது. TNUDF கடன் 25% சதவீதம் ரூ.102.35 கோடி, PSGF மானியம் 13.80% ரூ.56.49 கோடி, மத்திய அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் 31.88% ரூ.130.48 கோடி, தமிழக அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் 19.32% ரூ.79.08 கோடி

மற்றும் மாநகராட்சியின் பங்கு 10% ரூ.40.93 கோடி என்ற நிதி ஆதாரத்துடன் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளித்தும் மற்றும் அதற்கான நிபந்தனைகளுக்குட்பட்டு TNUDF மூலம் மானியம் பெறுவதற்கு பார்வையில் கண்ட மாமன்ற தீர்மானத்தின்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது.

நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் /ஊரக குடிநீர்திட்ட பிரிவு கோவை மற்றும் நிர்வாகப்பொறியாளர் பெருந்திட்ட கோட்டம் அவர்களது காலவரிசை நிகழ்வுகள் மற்றும் தாமதத்திற்கான பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்பட்டதில் முக்கியமானவற்றை (Chronological Events and Reason for Delay) கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

1. இரயில் தண்டவாளத்தின் குறுக்கே குழாய் பதிக்கும் பணிக்கு தெற்கு இரயில்வே நிலையம், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறுவது மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் குழாய்கள் பதிக்க அனுமதி பெறுவதில் தாமதம்.

2. கோவிட்–19 ஊரடங்கு உத்தரவு காரணமாக பணியாளர்கள் பணிக்கு வருவதில் ஏற்பட்ட தடையால் பணி முன்னேற்றம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

3. சட்டமன்ற தேர்தல் 27.02.2021–ல் வெளியிடப்பட்டதாலும் தேர்தல் விதி முறைகள் கடைபிடக்க வேண்டியதாலும் திட்ட பணிகள் தாமதமானதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

நிர்வாகப்பொறியாளர்கள் /தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் குறித்த காலத்தில் பணிகள் முடிக்க இயலவில்லை எனவும் தமது காலவரிசை நிகழ்வுகளில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி திட்ட பணிகள் நிறைவேற்றி முடிக்கவும் நிதி பெறவும் நிதி நிலையை கருத்தில் கொண்டும் கால அவகாசம் 31.12.2022 வரை நீட்டிக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் மாநகர மாமன்றத் தீர்மான எண்.13 நாள்.13.01.2022–ம் தேதிய தீர்மானத்தில் கடன் பெறுவதற்கான கால அவகாசம் 31.12.2022 வரை நீட்டிப்பு செய்து கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் நிறைவேற்ற மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, Kfw நிதி உதவி மூலம் TNUDF–லிருந்து (SMIF-TN-II-2) மானியம் பெறுவதற்கான காலம் 31.03.2022–ல் காலாவதியாவதால் மேலும் 9 மாதங்கள் கால நீட்டிப்பு செய்து 31.12.2022 வரை மானியம் பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.410/2015/ப.வ.(எம்)

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 60 நாள் 11.04.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 25 –க்குட்பட்ட தேவாங்கப்பேட்டை சாலையில் சேதமடைந்த குழாயை அம்மா உணவகம் முதல் பால் மார்க்கெட் வரை அகற்றி மாற்றும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.59,50,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.1440/2022/எம்.டி.5

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 61 நாள் 11.04.2022**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய வார்டுகளுக்கு தொடர்புடைய புதிய வார்டின் பகுதியில் ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் 2020–21-ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிறுவனத்தின் மூலம் உலக வங்கி திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ3493.00 இலட்சத்திற்கு அரசாணை எண். 02 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.2) துறை நாள்.07.01.2021 அரசாணையின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 8 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 18.02.2021-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிக்கான மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதில் தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP)-ன் நிபந்தனைகளின்படி ஒப்பந்தப்புள்ளி குறைபாடுகள் உள்ளதால் 8 சிப்பம் பணிகளுக்கு தேர்வு செய்யப்பட இயலாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் 6 சிப்பம் பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மாமன்ற தீர்மான எண். 262 நாள்.26.02.2021 -ன் படி நிறைவேற்றப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகிறது.

இதனைத்தொடர்ந்து, கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு பகுதிகளில் தற்சமயம் பழுதடைந்துள்ள சாலைகள், பாதாள சாக்கடை குழாய் அமைப்பதற்கு தோண்டப்பட்ட, குடிநீர் குழாய்கள் பதிப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளின் முன்னுரிமை அடிப்படையில் சாலைகளை சீரமைப்பு செய்வதற்கு தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிறுவனத்தின் மூலம் 2020–21 ஆண்டிற்கு 51.35 கி.மீ நீளத்திற்கு மாற்று பணிக்களுக்கான மதிப்பீடு ரூ3493.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு 8 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு 29.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், சிப்பங்கள் எண். 3,4,5,6,7 மற்றும் 8 ஆகியவற்றிற்கு தகுதிவாய்ந்த ஒப்புந்தப்புள்ளிகள் அளிக்கப்படவில்லை. மேலும், சிப்பம் எண். 1 மற்றும் 2 ஆகிய இரண்டு சிப்பங்களுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மாமன்ற தீர்மான எண். 28 நாள்.25.01.2022 –ல் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி 17.02.2022 அன்று கோரப்பட்டதில், சிப்பங்கள் எண். 3,4,5,6,7 மற்றும் 8 -ற்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2045/ 2020/ எம்டி.4 சிப்பம் 3 | மேற்கு மண்டலம் வார்டு எண் 21 மற்றும் தெற்கு மண்டலம் வார்டு எண் 76 க்குட்பட்ட பகுதிகளில் தார்சாலைகளைபுதுப்பித்தல். (1. முத்தண்ணன் குளம் பிரதான சாலை தடாகம் சாலை முதல் செல்வபுரம் சாலை சந்திப்பு 2. முத்துசாமி காலனி குறுக்கு வீதிகள் 3. ராஜூ நகர் மற்றும் குறுக்கு வீதிகள் 4. தில்லை நகர் குறுக்கு வீதிகள் 5.எல்.ஐ.சி காலனி குறுக்கு வீதிகள் 6. நேரு காலனி 7.சி.பி.எம் நகர் 8 .மீனாட்சி நகர் | 277.00 | இரண்டாம் அழைப்பு 17.02.2022 | திரு. ஆர்.வி.பி. பாலமுருகன் மதிப்பீட்டை விட 4.96 % அதிகம் | திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் மதிப்பீட்டை விட 4.96% அதிகம் |
| 2 | 2045/ 2020/ எம்டி.4 சிப்பம் 4 | தெற்கு மண்டலம் வார்டு எண் 86,87 மற்றும் 88 க்குட்பட்ட பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல். (1.புல்லுகாடு சாலை 2.அம்மன் கோவில் வீதி 3.பிரண்ட்ஸ் அவென்யூ 4.வசந்தம் கார்டன் 5.ஜே.பி நகர் 6. பால்பண்ணை வீதி 7.ரைஸ்மில் சாலை 8.சாந்தி நகர் பிரதானம் மற்றும் குறுக்கு சாலைகள் 9. சாஸ்தா நகர் ) | 437.16 | இரண்டாம் அழைப்பு 17.02.2022 | தி/ள்.எம்.எஸ். இன்ஜினீயர்ஸ் & பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 3.58% அதிகம் | தி/ள்.எம்.எஸ். இன்ஜினீயர்ஸ் & பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 3.58% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 2045/ 2020/ எம்டி.4 சிப்பம் 5 | தெற்கு மண்டலம் வார்டு எண்.89 மற்றும் 90 க்குட்பட்ட பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல். (1. பேங்க் வீதி 2. ராதராம் நகர் பிரதானம் மற்றும் குறுக்கு சாலைகள் 3 . இந்தியன் பேங்க் காலனி பிரதானம் மற்றும் குறுக்கு சாலைகள் 4. பாக்யா நகர் பிரதானம் மற்றும் குறுக்கு சாலைகள் 5. ஜுடிசியல் காலனி பிரதான மற்றும் குறுக்கு சாலைகள் 6. சமீம் கார்டன் பிரதான சாலை (டவர் லைன் சாலை) 7.காசிநாத் | 722.25 | இரண்டாம் அழைப்பு 17.02.2022 | 1). தி/ள்.வி. மீனாள் & கோ மதிப்பீட்டை விட 4.91% அதிகம்<br><br>2).தி/ள். வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 13.14% அதிகம் | தி/ள்.வி.மீனாள் & கோ மதிப்பீட்டை விட 4.91% அதிகம் |
| | | கார்டன் பிரதானம் மற்றும் குறுக்கு சாலை 8. நேரு நகர் பிரதான சாலை (பாலமுருகன் கோவில் சாலை), 9.பள்ளிவாசல் வீதி 10. சாந்தி நகர் 11. மீனாட்சி நகர் பிரதான சாலை (சாந்தி ஆசிரமம் முதல் தில்லை நகர்) 12. ஹவுசிங் யூனிட் X பிளாக், பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள் 13.தில்லை நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள் 14. முல்லை நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள் 15. பரிபூர்ணா எஸ்டேட் பிரதான சாலை (மீனாட்சி நகர் முதல் பரிபூர்ணா எஸ்டேட்) 16.ஹவுசிங் யூனிட் Q பிளாக் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள் 17. ஆல்ஃபா நகர் 18. விசாலாட்சி நகர் 19. ஹவுசிங் யூனிட் S பிளாக் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள் 20. கோவைப்புதூர் ஹவுசிங் யூனிட் குறுக்கு சாலைகள் 21. 100 அடி சாலை (போலீஸ் பட்டாலியன் முதல் ஆர்.டி.ஒ ஆபிஸ் சாலை வரை) | | | | |
| 4 | 2045/ 2020/ எம்டி.4 சிப்பம் 6 | தெற்கு மண்டலம் வார்டு எண்.91 க்குட்பட்ட பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள தார்சாலையை புதுப்பித்தல். (1. கே.எம்.ஆர் கார்டன் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 2. ஜி.டி.லே–அவுட் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 3. ஸ்ரீ நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 4. எஸ்.கே நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 5. பாலு அவுன்யூ பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 6. பழனியப்பா நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள்,7. காமாட்சி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 8. ராமானுஜம் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு | 519.80 | இரண்டாம் அழைப்பு 17.02.2022 | 1).தி/ள்.ஏ.எஸ்.பி & கோ மதிப்பீட்டை விட 9.07% அதிகம்<br><br>2).தி/ள்.ஸ்ரீ.பி. மல்லையன் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 1.44% குறைவு | தி/ள்.ஸ்ரீ.பி. மல்லையன் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 1.44%குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சாலைகள் 9. இட்டேரி வீதி சாலை, 10. மாட்டுகாரச்சாமி கோவில் வீதி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 11. காஸ்மோ காலனி பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள்,12. மோனோபாய் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 13. மல்லையா கார்டன் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 14. மகாலட்சுமியுரம் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள், 15. ஸ்ரீபால் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகள் ) | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 2045/ 2020/ எம்டி.4 சிப்பம் 7 | தெற்கு மண்டலம் வார்டு எண் 92 க்குட்பட்ட பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் தோண்டப்பட்டு சேதமடைந்துள்ள ஈ.பி.காலனி பிரதான சாலை, ஈ.பி.காலனி 1 வது வீதி மற்றும் குறுக்கு வீதி 1, குறுக்கு வீதி 2, குறுக்கு வீதி 3, குறுக்கு வீதி 4, குறுக்கு வீதி 5, குறுக்கு வீதி 6, குறுக்கு வீதி 7, சாரதா நகர் 2 வது வீதி, சாரதா நகர் 2 வது குறுக்கு, சாரதா நகர் 2 வது குறுக்கு 2, மதுரை வீரன் கோவில் 1 வது வீதி மற்றும் 2 வது வீதி, பழனியப்ப கோனார் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலையை புதுப்பித்தல் மற்றும் வார்டு எண் 93 க்குட்பட்ட மதுரை வீரன் கோவில் வீதி பிரதான சாலை, மணிகண்டன் நகர் மேற்கு பிரதான சாலை, மணிகண்டன் நகர் ஐயப்பன் கோவில் வீதி, ஐயப்பன் கோவில் வீதி விரிவாக்கம், மணிகண்டன் நகர் மேற்கு 1 வது வீதி, மணிகண்டன் நகர் மேற்கு 2 வது வீதி, மணிகண்டன் நகர் மேற்கு 3 வது வீதி, மணிகண்டன் நகர் மேற்கு 4 வது வீதி, மணிகண்டன் நகர் மேற்கு 5 வது வீதி, சர்ச் வீதி 1 வது வீதி, சர்ச் வீதி 2 வது வீதி, சர்ச் வீதி 3 வது வீதி, சர்ச் வீதி 4 வது வீதி, சர்ச் வீதி 5 வது வீதி மற்றும் சர்ச் வீதி 5 வது வீதி விரிவாக்கம், பெரியார் நகர் பிரதான சாலை, பூந்தோட்டம் விரிவாக்கம் பிரதான வீதி, பூந்தோட்டம் விரிவாக்கம் குறுக்கு வீதி, பகவதி அம்மன் நகர் பிரதான வீதி, பகவதி அம்மன் 2 வது வீதி, பகவதி அம்மன் 3 வது வீதி, பகவதி அம்மன் 4 வது வீதி, அம்மன் காலனி பிரதான சாலை, அம்மன் காலனி 1 வது வீதி, அம்மன் காலனி 3 வது வீதி, அம்மன் காலனி 3 வது வீதி விரிவாக்கம், அம்மன் காலனி 4 வது வீதி, அம்மன் காலனி 5 வது வீதி, அம்மன் | 362.04 | இரண்டாம் அழைப்பு 17.02.2022 | 1).தி/ள்.அபி அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.45% அதிகம் | தி/ள்.அபி அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.45% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | காலனி 6 வது வீதி மற்றும் அம்மன் காலனி 7 வது வீதி தார்சாலைகளை புதுப்பித்தல். | | | | |
| **6** | **2045**/ 2020/ எம்டி.4 சிப்பம் 8 | தெற்கு மண்டலம் வார்டு எண் 95 க்குட்பட்ட சேதமடைந்துள்ள திருமறை நகர் குறுக்கு சாலை –1 , திருமறை நகர் குறுக்கு சாலை –2, திருமறை நகர் குறுக்கு சாலை –3, திருமறை நகர் குறுக்கு சாலை –4, திருமறை நகர் குறுக்கு சாலை –5, திருமறை நகர் குறுக்கு சாலை –6, திருமறை நகர் குறுக்கு | **356.40** | இரண்டாம் அழைப்பு 17.02.2022 | 1).திரு.ஏ. வெங்கடாசலம் மதிப்பீட்டை விட 4.47% அதிகம் | திரு.ஏ. வெங்கடாசலம் மதிப்பீட்டை விட 4.47% அதிகம் |
| | | சாலை –7, திருமறை நகர் குறுக்கு சாலை –8, திருமறை நகர் குறுக்கு சாலை –9, திருமறை நகர் குறுக்கு சாலை –10, திருமறை நகர் குறுக்கு சாலை –11, திருமறை நகர் குறுக்கு சாலை –12, திருமறை நகர் குறுக்கு சாலை –13, திருமறை நகர் குறுக்கு சாலை –14, திருமறை நகர் குறுக்கு சாலை –1 5 ஆகிய பகுதிகளில் தார்சாலையை புதுப்பித்தல். வார்டு எண் 99 க்குட்பட்ட ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –1 , ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –2, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –3, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –4, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –5, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –6, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –7, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –8, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –9, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – 10, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –11, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –12, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –13, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –14, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –15, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை–16, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – 17, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –18, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –19, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –20, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –21, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – 22, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –23, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –24, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –25, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –26, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – 27, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –28, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –29, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –30, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –31, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – 32, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –33, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –34, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –35, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –36, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 37, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –38, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –39, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –40, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –41, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – 42, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –43, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –44, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –45, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –46, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – | | | | |
| | | 47, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –48, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –49, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –50, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –51, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை – 52, ஸ்ரீராம் நகர் குறுக்கு சாலை –53 ஆகிய பகுதிகளில் தார்சாலையை புதுப்பித்தல். | | | | |

இப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப திறனாய்வு செய்து தடையின்மை சான்று பெறுவதற்கு தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, அந்நிறுவனத்திடமிருந்து சிப்பம் எண். 3,4,5,6,7 மற்றும் 8 ஆகியவற்றிற்கு 16.03.2022 அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2045/2020/எம்டி.4

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 62 நாள் 11.04.2022**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய வார்டுகளுக்கு தொடர்புடைய புதிய வார்டுகளின் பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் –38–க்குட்பட்ட வடவள்ளி மருதமலை அடிவாரம் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி கட்டண கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து இருப்பதால், ஆணையாளர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் பழுதடைந்த கட்டிடத்தை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த உத்திரவிட்டுள்ளதை தொடர்ந்து பழுதடைந்துள்ள மாநகராட்சி கட்டண கழிப்பிட கட்டிடத்தினை இடித்து, அப்புறப்படுத்த உத்தேச செலவு தொகை ரூபாய்.38,868/– மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பழுதடைந்துள்ள மாநகராட்சி கட்டண கழிப்பிட கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால் மாநகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பணிகளை செய்ய அதற்குண்டான உத்தேச செலவு தொகை ரூபாய்.38,868/–க்கு அனுமதியும், பணி முழுமையாக முடித்த பின்பு செலவுத் தொகையினை ஒப்பந்ததாருக்கு சில்லறை செலவினப் பட்டியல் வாயிலாக உதவி ஆணையாளர் மேற்கு மண்டலம் மூலம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1541 /2022/எம்.டி2

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 63 நாள் 11.04.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் உக்கடம் பகுதியில் கட்டப்பட்டுள்ள **70** MLD கொள்ளளவுள்ள (SBR முறையில்) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

*******

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித எண்.**17021/2021**/E1 நாள்.**14.12.2021** ல் , தேசிய பசுமை தீர்பாயத்தின் (NGT,CPCB) வழிகாட்டுதலின் படி , கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இணையதளம் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System (OCEMS)) நிறுவுவதற்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து இப்பணிக்கு ரூ.**48.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த **10.11.2021** அன்று நடைபெற்ற Empowered Committee கூட்டத்தில், இணைய தளம் வழி (Online Continuous Effluent Monitoring System (OCEMS) தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு நிறுவுவதற்கு மூலதன மான்ய நிதி , இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி **2021–22**ல் (Capital Grand Fund and O & M Gap filling fund) ரூ.**41.72** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு ரூ.**41.72** இலட்சம் மூலதன மான்ய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியிலிருந்தும் மற்றும் மீதமுள்ள ரூ.**6.28** இலட்சம் பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும், மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது .

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.**684**/ **2022**/ஜேஎன்.**4**

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 64 நாள் 11.04.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒண்டிபுதூர் பகுதியில் கட்டப்பட்டுள்ள **60** MLD கொள்ளளவுள்ள (SBR முறையில்) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

*******

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது எண்.**17021/2021**/E2 நாள்.**22.10.2021**ந் தேதிய கடிதத்தில், தேசிய பசுமை தீர்பாயத்தின் (NGT,CPCB) வழிகாட்டுதலின்படி , கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இணையதளம் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System (OCEMS)) நிறுவுவதற்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து இப்பணிக்கு ரூ.**48.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த **10.11.2021** அன்று நடைபெற்ற Empowered Committee கூட்டத்தில், இணைய தளம் வழி (Online Continuous Effluent Monitoring System (OCEMS) தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு நிறுவுவதற்கு மூலதன மான்ய நிதி , இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி **2021–22**ல் (Capital Grand Fund and O & M Gap filling fund) ரூ.**41.72** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு ரூ.**41.72** இலட்சம் மூலதன மான்ய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியிலிருந்தும் மற்றும் மீதமுள்ள ரூ.**6.28** இலட்சம் பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும், மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது .

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **686**/ **2022**/ஜேஎன்.**4**

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 65 நாள் 11.04.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நஞ்சுண்டாபுரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள **40** MLD கொள்ளளவுள்ள (SBR முறையில்) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

*******

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது எண்.**17021/2021**/E2 நாள்.**22.10.2021**ந் தேதிய கடிதத்தில், தேசிய பசுமை தீர்பாயத்தின் (NGT,CPCB) வழிகாட்டுதலின்படி , கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இணையதளம் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System (OCEMS)) நிறுவுவதற்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து இப்பணிக்கு ரூ.**34.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த **10.11.2021** அன்று நடைபெற்ற Empowered Committee கூட்டத்தில், இணைய தளம் வழி (Online Continuous Effluent Monitoring System (OCEMS) தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு நிறுவுவதற்கு மூலதன மான்ய நிதி , இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி **2021–22**ல் (Capital Grand Fund and O & M Gap filling fund) ரூ.**34.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு ரூ.**34.00** இலட்சம் மூலதன மான்ய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது .

அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். **685/2022**/ஜேஎன்.**4**

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 66 நாள் 11.04.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் ஆழ்குழாய் கிணற்று மின் மோட்டார் மற்றும் திறந்தவெளி கிணறுகளை இயக்குதல் பராமரித்தல் பணி நடைபெற்று வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சம்) | பணி உத்தரவு நாள் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | 1. | வார்டு எண். 1-ல் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க. எண். 1417/2021/எம்டி2** | 6.70 | 26.02.2021 | தி/ள். PAT என்டர்பிரைசஸ் |
| 2. | 29. | வார்டு எண். 29-ல் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க. எண். 1424/2021/எம்டி2** | 4.75 | 23.02.2021 | தி/ள்.அருண் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| 3. | 41. | வார்டு எண். 41-ல் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க. எண். 1460/2021/எம்டி2** | 14.50 | 23.02.2021 | தி/ள்.தங்கம்மன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| 4. | 44. | வார்டு எண். 44-ல் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க. எண். 1461/2021/எம்டி2** | 11.00 | 23.02.2021 | திரு.G. அருள்குமரன் |
| 5. | 46. | வார்டு எண். 46-ல் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க. எண். 1462/2021/எம்டி2** | 5.30 | 23.02.2021 | திருமதி.கே. சுமதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | 47. | வார்டு எண். 47-ல் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க. எண். 1463/2021/எம்டி2** | 8.00 | 24.02.2021 | திருமதி.கே.சுமதி |
| 7. | 55. | வார்டு எண். 55-ல் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி **ந.க. எண். 1429/2021/எம்டி2** | 10.00 | 23.02.2021 | தி/எ். கார்தீப் இன்ஜ்னியரிங் |
| | | **மொத்தம்** | **60.25** | | |

மேற்படி பணிகளின் ஒப்பந்தகாலம் 31.03.2022 உடன் முடிவடைய உள்ளதாலும், பொது கழப்பிடங்களுக்கு பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமானதாலும், மேற்படி ஒப்பந்ததார்கள் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலைப்புள்ளி விகிதத்திற்கே அடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தம் முடிவு செய்து பணி உத்தரவு வழங்கும் வரையில் இரண்டு மாதங்கள் (01.04.2022 முதல் 31.05.2022 வரை) கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதியும், அதற்குண்டான கூடுதல் செலவினத்திற்கு ஒப்புதலும் வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:- **1417 /2021/எம்.டி.2**

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 67 நாள் 11.04.2022**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய வார்டுகளுக்கு தொடர்புடைய புதிய வார்டுகளின் பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் கழிப்பிடங்களுக்கு பராமரிப்பு செய்தல் பணி நடைபெற்று வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சம்) | பணி உத்தரவு நாள் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | 1,2,3,4 | வார்டு எண்.1, 2, 3 மற்றும் 4 பகுதிகளில் உள்ள 12 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி – **ந.க. எண். 1430/2021/எம்டி2** | 21.50 | 23.02.2021 | திருமதி. எஸ்.சாந்தி |
| 2. | 26,27,42,43 | வார்டு எண்.26, 27, 42 மற்றும் 43 பகுதிகளில் உள்ள 21 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி – **ந.க. எண். 1431/2021/எம்டி2** | 24.50 | 26.02.2021 | தி/எ். மகா பில்டர்ஸ் |
| 3. | 28,31 | வார்டு எண். 28, 31 பகுதிகளில் உள்ள 6 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி **ந.க. எண். 1432/2021/எம்டி2** | 11.00 | 23.02.2021 | தி/எ். அருண் கன்ஸ்ட்ரக் சன்ஸ் |
| 4. | 38 | வார்டு எண். 38 பகுதிகளில் உள்ள 3 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி **ந.க. எண். 1433/2021/எம்டி2** | 7.00 | 10.05.2021 | தி/எ். சி.ஆர்.பி கன்ஸ்ட்ரக் சன்ஸ் |
| 5. | 39 | வார்டு எண். 39 பகுதிகளில் உள்ள 3 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி **ந.க. எண். 1434/2021/எம்டி2** | 5.50 | 10.05.2021 | தி/எ். சி.ஆர்.பி கன்ஸ்ட்ரக் சன்ஸ் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | 40 | வார்டு எண். 40 பகுதிகளில் உள்ள 6 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி **ந.க. எண். 1435/2021/எம்டி2** | 7.00 | 10.05.2021 | தி/ள். அருண் கன்ஸ்ட்ரக் சன்ஸ் |
| 7. | 41,44,46,47 | வார்டு எண். 41, 44, 46, 47 பகுதிகளில் உள்ள 9 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி **ந.க. எண். 1464/2021/எம்டி2** | 15.50 | 26.02.2021 | திரு. G.அருள் குமரன் |
| 8. | 55 | வார்டு எண். 55 பகுதிகளில் உள்ள 7 எண்ணிக்கைகள் கொண்ட பொது கழிப்பிடங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி **ந.க. எண். 1465/2021/எம்டி2** | 11.50 | 26.02.2021 | திரு. G.அருள் குமரன் |
| | | **மொத்தம்** | **103.50** | | |

மேற்படி பணிகளின் ஒப்பந்தகாலம் 31.03.2022 உடன் முடிவடைய உள்ளதாலும், பொது கழப்பிடங்களுக்கு பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமானதாலும், மேற்படி ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலைப்புள்ளி விகிதத்திற்கே அடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தம் முடிவு செய்து பணி உத்தரவு வழங்கும் வரையில் இரண்டு மாதங்கள் (01.04.2022 முதல் 31.05.2022 வரை) கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதியும், அதற்குண்டான கூடுதல் செலவினத்திற்கு ஒப்புதலும் வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:- **1430/2021/எம்.டி.2**

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 68 நாள் 11.04.2022**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய வார்டுகளுக்கு தொடர்புடைய புதிய வார்டுகளின் பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஆட்களை வைத்து குடிநீர் வினியோகம் செய்தல் பணி நடைபெற்று வருகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சம்) | பணி உத்தரவு நாள் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | 1. | வார்டுஎண் - 1 - வடக்கு மண்டலம் பில்லூார் குடிநீர் வினியோகம் - துடியலூர் மற்றும் சேரன் காலனி மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி ந.க. எண். 1466/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | தி/ள். PAT என்டர் பிரைசஸ் |
| 2. | 2. | வார்டுஎண் - 2 - வடக்கு மண்டலம் பில்லூார் குடிநீர் வினியோகம் - வி.கே.எல் நகர் மற்றும் சாய் நகர் மேல்நிலைநீர் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி ந.க. எண். 1467/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | தி/ள். PAT என்டர் பிரைசஸ் |
| 3. | 3. | வார்டுஎண் - 3 - வடக்கு மண்டலம் பில்லூார் குடிநீர் வினியோகம் - சுப்பிரமணியம் பாளையம் மற்றும் காந்திநகர் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி ந.க. எண். 1468/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | தி/ள். PAT என்டர் பிரைசஸ் |
| 4. | 4. | வார்டுஎண் - 4 - வடக்கு மண்டலம் பில்லூார் குடிநீர் வினியோகம் - அப்பநாயக்கன்பாளையம் மற்றும் S.M.T நகர் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி ந.க. எண். 1469/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | தி/ள். PAT என்டர் பிரைசஸ் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | 26. | வார்டுஎண் - 26 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் - வெள்ளகிணறு மற்றும் வட்டமலைபாளையம் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1470/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | தி/ள். சரவணா அசோசி யேட்ஸ் |
| 6. | 27. | வார்டுஎண் - 27 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் வேலப்பநாயக்கன் புதூர் மற்றும் நஞ்சேகவுண்டன் புதூர் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1471/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | தி/ள். சரவணா அசோசி யேட்ஸ் |
| 7. | 28. | வார்டு எண் - 28 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் - சரவணம்பட்டி மற்றும் சின்னமேட்டுப்பாளையம் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1444/2021/எம்டி2 | 9.70 | 24.02.2021 | திருமதி. பி.கே.நிர்மலா |
| 8. | 29. | வார்டு எண் - 29 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் - LGB நகர் மற்றும் அபிராமி நகர் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1445/2021/எம்டி2 | 9.70 | 24.02.2021 | திருமதி. பி.கே.நிர்மலா |
| 9. | 30. | வார்டு எண் - 30 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் - சிவானந்தபுரம் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1446/2021/எம்டி2 | 9.70 | 24.02.2021 | திருமதி. பி.கே.நிர்மலா |
| 10. | 31. | வார்டு எண் - 31 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் - விநாயகபுரம் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1447/2021/எம்டி2 | 9.70 | 24.02.2021 | திருமதி. பி.கே.நிர்மலா |
| 11. | 42. | வார்டுஎண் - 42 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் - சின்னவேடம்பட்டி மற்றும் உடையாம்பாளையம் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1473/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | திரு. எஸ்.சிவராஜ் |
| 12. | 43. | வார்டுஎண் - 43 - வடக்கு மண்டலம் பில்லூர் குடிநீர் விநியோகம் - உருமாண்டம்பாளையம் மற்றும் வி.சி.எஸ் நகர் மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிகள் - இயக்குதல் - தனியார் பராமரிப்பு பணி<br>ந.க. எண். 1472/2021/எம்டி2 | 11.00 | 26.02.2021 | திரு. எஸ்.சிவராஜ் |
| | | மொத்தம் | 126.80 | | |

மேற்படி பணிகளின் ஒப்பந்தகாலம் 31.03.2022 உடன் முடிவடைய உள்ளதாலும், பொது கழப்பிடங்களுக்கு பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமானதாலும், மேற்படி ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்த விலைப்புள்ளி விகிதத்திற்கே அடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தம் முடிவு செய்து பணி உத்தரவு வழங்கும் வரையில் இரண்டு மாதங்கள் (01.04.2022 முதல் 31.05.2022 வரை) கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதியும், அதற்குண்டான கூடுதல் செலவினத்திற்கு ஒப்புதலும் வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:- **1466 /2021/எம்.டி.2**

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 69 நாள் 11.04.2022</u>**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய வார்டுகளுக்கு தொடர்புடைய புதிய வார்டுகளின் பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.72 – அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு ஒன்பது ஆண்டுகள் உரிம காலம் 14.10.2021 உடன் முடிவடைந்தது – அரசாணையின்படி பொதுப்பணித்துறை வாடகை நிர்ணயம் செய்து உரிம நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்.147 ந.நி.ம.கு.வ துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3. மாமன்ற தீர்மான எண்.393 நாள்.26.02.2016.
4. குத்தகை ஒப்பந்தபத்திரம்
5. மண்டல பாஸ்போர்ட் அலுவலர், கோயம்புத்தூர் அவர்களது கடிதம் எண். CBE/551/56/2012 நாள்.30.08.2021.
6. இவ்வலுவலக கடித எண்.ந.க.எண்.5703/2021/அ2(ம) நாள்.03.01.2022.
7. மண்டல பாஸ்போர்ட் அலுவலர், கோயம்புத்தூர் அவர்களது கடிதம் எண். CBE/551/56/2012 நாள்.07.01.2022.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் முதல் தளத்தில் செயல்பட்டு வரும் 10458 ச.அடி பரப்பளவில் மாத வாடகை ரூ.2,28,505/- அடிப்படையில் செயல்பட்டு வரும் பாஸ்போர்ட் அலுவலகத்தின் 9 ஆண்டு உரிம காலம் 14.10.2021 உடன் முடிவடைந்து விட்டது. நாளது தேதி வரை வாடகை உயர்வு செய்யப்படாமல் மாத வாடகை ரூ.2,28,505/- அடிப்படையிலேயே நவம்பர் 2021 வரை செலுத்தப்பட்டு வருகிறது.

பார்வை (1) மற்றும் (2)-ல் குறிப்பிட்டுள்ள அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007-ன்படி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உரிம கட்டணம் உயர்வு செய்து உரிம நீட்டிப்பு செய்யவும், 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீடுகளின் அடிப்படையில் உரிம கட்டணம் மறுநிர்ணயம் செய்து உரிம காலம் நீட்டிப்பு செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை (3)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி வாடகை 15 சதவீதம் ரூ.198700/- லிருந்து உயர்வு செய்து ரூ.2,28,505/- மாத வாடகை 15.10.2015 முதல் 14.10.2018 வரை செலுத்தப்பட்டுள்ளது. பார்வை (4)-ல் காணும் ஒப்பந்தபத்திரம் அடிப்படையில் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து வழங்கப்படவேண்டும். ஆனால் அதன் பின்னர் 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்படாமல் தொடர்ந்து மேற்படி அலுவலகத்திற்கு 15.10.2015 முதல் நவம்பர் 2021 வரை ரூ. 2,28,505/- மாதம் ஒன்றுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 9 ஆண்டுகள் முடிவுற்றபின் வாடகை பொதுப்பணித்துறை வாடகை கணக்கீட்டின்படி வாடகை மறுநிர்ணயம் செய்யப்படவேண்டும்.

பார்வை (5)-ல் காணும் மண்டல பாஸ்போர் அலுவலர் அவர்களின் கடிதத்தில் அரசாணையின்படி மேற்படி மண்டல பாஸ்போர்ட் அலுவலக கட்டிடத்திற்கு ஒப்படை செய்யப்பட்டதன் உரிம காலம் 14.10.2021 உடன் ஒன்பதாண்டுகள் முடிவடைந்து விட்டதால், வாடகை மறுநிர்ணயம் செய்து வழங்குமாறு கேட்கப்பட்டதின் அடிப்படையில், அரசாணையின்படி பொதுப்பணிதுறை வாடகை மதிப்பீட்டின்படி கீழ்கண்டவாறு மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| வ. எண் | அமைவிடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ. | பொதுப்பணித் துறை கணக்கீட்டின்படி நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.72 மாநகராட்சிக்கு சொந்தமான அவினாசி ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சி வணிக வளாகம். | 10458 | 52.08 | 5,44,681/- |

மேற்படி 9 ஆண்டுகள் முடிவுற்றபின் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகையை 15.10.2021 முதல் 14.10.2024 வரை செலுத்தவும் ஒவ்வொரு மூன்றாண்டு முடிவில் 15 சதவீதம் உயர்வு செய்து அடுத்து வரும் 9 ஆண்டுகள் பொதுப்பணித்துறை கணக்கீட்டின்படி மாத வாடகை ரூ.5,44,681/-க்கு நிர்ணயம் செய்து வழங்குவதற்கு சம்மத கடிதம் வழங்குமாறும் மேலும் 15.10.2018 முதல் 14.10.2021 வரை உள்ள மூன்றாண்டுகளுக்கு செலுத்த வேண்டி வித்தியாச தொகையினை செலுத்துமாறும் பார்வை (6)-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

பார்வை (7)-ல் காணும் கடிதத்தில் 15.10.2018 முதல் 14.10.2021 வரை மூன்றாண்டுகளுக்கு ரூ.2,62,781/- மாதம் ஒன்றுக்கு உயர்வு செய்யப்பட்ட வித்தியாச தொகையினை செலுத்தவும் மேலும் மேற்படி நிறுவனம் மத்திய அரசுக்கு உட்பட்டது எனவும் ஆறு மாவட்டங்களுக்கு உட்பட்ட (கோயம்புத்தூர் மாவட்டம், நீலகிரி மாவட்டம், சேலம் மாவட்டம், திருப்பூர் மாவட்டம், ஈரோடு மாவட்டம் மற்றும் நாமக்கல் மாவட்டம்) பொது மக்களுக்கு கடவு சீட்டு வழங்குவும் பணியை வியாபார நோக்கு இன்றி இந்திய மக்கள் அனைவருக்கும் சேவை செய்து வருவதாகவும், மாத வாடகை ரூ.5,44,681/- என நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகையினை மறு நிர்ணயம் செய்து 15.10.2021 முதல் ஏற்கனவே உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. 2,62,781/-யிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து ரூ. 302198/- என நிர்ணயம் செய்து வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

| வ. எண் | காலம் | | மாத வாடகை | மாதம் செலுத்தியது | செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவை (ஒவ்வொரு மூன்றாண்டு) வித்தியாசத் தொகை |
|---|---|---|---|---|---|
| | முதல் | முடிவு | | | |
| 1 | 15.10.2012 | 14.10.2015 | 198700 | 198700 | 0 |
| 2 | 15.10.2015 | 14.10.2018 | 228505 | 228505 | 0 |
| 3 | 15.10.2018 | 14.10.2021 | 262781 | 228505 | 1233936 |

எனவே, 15.10.2018 முதல் 14.10.2021 வரை மூன்றாண்டுகளுக்கு 15% வாடகை உயர்வு செய்து ரூ.2,62,781/- என நிர்ணயம் செய்யவும் உயர்வு செய்யப்பட்ட வித்தியாச தொகை ரூ.12,33,936/-யினை செலுத்தக் கோரவும் 9 ஆண்டுகளுக்கு பின்னர் அரசாணையின் படி வாடகை மறு நிர்ணயம் செய்ய பொதுப்பணித்துறை வாடகை கணக்கீட்டின்படி மாத வாடகை ரூ.5,44,681/- எனவும் சந்தை மதிப்பின் அடிப்படையில் ரூ.4,28,778/- எனவும் இதில் எது அதிகமோ அதை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஆனால் மண்டல பாஸ்போர்ட் அலுவலர் அவர்களது கடிதத்தில் கோரியுள்ளபடி, பாஸ்போர்ட் அலுவலகம் சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் மத்திய அரசு சார்ந்த நிறுவனம் என்பதால் உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ.2,62,781/-லிருந்து 15% உயர்வு செய்து ரூ.3,02,198/- என 15.10.2021 14.10.2024 வரை 3 ஆண்டுகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து உரிமம் நீட்டிப்பு செய்வது தொடர்பாக மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க. எண். 5703/2021/அ2(ம)

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 70 நாள் 11.04.2022**

மாத வாடகையாக ரூ.4,28,778/- என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 13**

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் மழைநீர் பம்ப் மோட்டாரை இயக்குதல் மற்றும் கழிவு நீர் மின் மோட்டாரை பராமரித்தல் பணி நடைபெற்று வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சம்) | பணி உத்தரவு நாள் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | 28 | வார்டு எண் 28க்குட்பட்ட சிவசக்தி நகர் பகுதியில் மழைநீர் பம்ப் மோட்டாரை இயக்கி பராமரித்தல் பணி ந.க. எண்.1440 /2021/எம்டி2 | 3.75 | 23.02.2021 | தி,ள் அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் |
| 2. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட பாலமுருகன் நகர் பகுதியில் கழிவு நீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து பராமரித்தல் பணி ந.க. எண்.1436 /2021/எம்டி2 | 1.70 | 23.02.2021 | திருமதி.கே.சுமதி |
| 3. | 44 | வார்டு எண் 44க்குட்பட்ட தேமையான் வீதி, லட்சுமி நகர், விஜயா நகர் பகுதியில் கழிவு நீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து பராமரித்தல் பணி ந.க. எண். 1437/2021/எம்டி2 | 3.00 | 23.02.2021 | தி,ள் ஆர்.பி.எஸ் கன்ஸ்ட்ரக்சன்ஸ் |
| 4. | 46 | வார்டு எண் 46க்குட்பட்ட நல்ல தண்ணித் தோட்டம் பகுதியில் கழிவு நீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து பராமரித்தல் பணி ந.க. எண். 1438/2021/எம்டி2 | 1.50 | 23.02.2021 | திருமதி.கே.சுமதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | 47 | வார்டு எண் 47க்குட்பட்ட தெய்வநாயகி நகர் பகுதியில் கழிவு நீர் மின் மோட்டாரை ஒரு வருட காலத்திற்கு ஆட்களை வைத்து பராமரித்தல் பணி<br>ந.க. எண்.1439 /2021/எம்டி2 | 1.70 | 23.02.2021 | திருமதி.கே.சுமதி |
| | | மொத்தம் | 11.65 | | |

